பதிவு எண்: M. 6811 ☆ தொலைபேசி: 51331 ☆ நிறுவியது: 1953 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 30 (15—11—72) புதன்   வெளியூர்: கார்த்திகை 1 (16—11—72) வியாழன் [இதழ்: 126

# எதிரிகளின் சதித் திட்டம்

[★]

## அரசியல் மோசடிக்காரர்களின் அச்சுறுத்தல்

[★]

## 'சனநாயக விரோதிகளின் நோக்கம் நிறைவேற இடந்தராதீர்'-- தமிழக மக்களுக்கு கலைஞர் வேண்டுகோள்

சென்னை; நவ. 15—

"அறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பெற்ற தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் -- பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகவும் ஏழை -- நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்காகவும் தொடர்ந்து பணியாற்றி வருகின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசை மாற்ற வேண்டும் -- விலக்க வேண்டும் -- கவிழ்க்க வேண்டும் அல்லது அந்த அரசு தானாகவே தன்னைக் கலைத்துக்கொள்ள வேண்டுமென்று சனநாயகத்திற்குப் புறம்பான முறையில் கலவரங்களைத் தூண்டிவிட்டும், அராஜகங்களை நடத்தச் சதித் திட்டங்களை வகுத்துக்கொண்டும் வன்முறையாளர்கள் நடத்துகின்ற கிளர்ச்சிகளைத் தமிழ்நாட்டு மக்கள நன்கு அறிவார்கள்.

"இந்த அரசு ஏன் பதவி விலக வேண்டும்? ஐந்தாண்டுக்கு ஒருமுறை வரும் தேர்தலில் மக்கள் அளிக்கும் தீர்ப்பின் அடிப்படையில்தான் ஆட்சி உருவாகிறது! எந்த அளவுகோலை வைத்துக்கொண்டு இடையிலேயே திடீரென்று மக்கள் சக்தி மாறிவிட்டது என்று கூற முடியும்?

"சமதர்மத் திட்டத்தின் அடிப்படையில், பஸ்கள் தேசியமயக் கொள்கை -- பத்து பஸ்கள் உச்சவரம்பு -- நிலச் சீர்திருத்தச் சட்டம் -- விதிவிலக்குகள் ரத்து -- சுயமரியாதைத் திருமணச் சட்டம் -- தமிழ்நாடு பெயர் மாற்றம் -- தியாகிகட்குப் பாராட்டும், மானிய உதவியும் -- அரிசனங்கட்கு அறங்காவல் துறையில் இடம் அளிக்கச் சட்டம் -- இன்னோரன்ன எண்ணிலடங்காச் சாதனைகளைப் புரிந்து, சாதாரண மக்களின் வாழ்வுக்காக -- தமிழகத்தின் மேன்மைக்காக -- உழைக்கும் ஒரு சோஷலிச அரசாங்கத்தை -- தமிழர்களின் அரசை வீழ்த்திட முனைவோரின் விதண்டாவாதப் போக்கைத் தமிழக மக்கள் புரிந்துகொள்ளாமல் இல்லை! ஆயினும், குழப்பமும் -- பீதியும் கலந்த செய்திகளை வெளியிட்டுப் பொதுமக்களை அச்சுறுத்த முனைகிறார்கள் -- அரசியல் மோசடிக்காரர்கள்!

"அவர்களின் தீய நோக்கம் நிறைவேறாவண்ணம் எல்லா நேரங்களிலும் தமிழ் மக்கள் அமைதியும் பொறுமையும் காத்து, சட்டம் -- ஒழுங்கினை நமது மாநிலத்தில் தொடர்ந்து காப்பாற்ற ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."

**—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்! இதன் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், 'இந்த அரசு மக்களுக்கு என்ன நல்ல காரியங்களைச் செய்யவில்லை' என்று வினவி -- அரசு அளித்துள்ள சலுகைகளை விளக்கியிருக்கிறார்! அது வருமாறு:—**

"1967-ல் அரிசனங்களுக்காக அரசு ஒதுக்கிய தொகை மூன்றரைக் கோடி ரூபாய்.

1972-ல் அரிசனங்களுக்காக ஒதுக்கிய தொகை எட்டரை கோடி ரூபாய்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 1967-ல் அரசு ஒதுக்கிய தொகை ஒரு கோடி ரூபாய்.

1972-ல் ஒதுக்கியுள்ள தொகை நான்கரை கோடி ரூபாய்.

வேலை வாய்ப்புக்கள் -- கல்லூரிகளில் இடமளித்தல் போன்றவற்றில் அரிசன மக்களுக்கு இருந்த ஒதுக்கீடு 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

அதைப் போலவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதமாக இருந்த ஒதுக்கீடு 31 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஐந்து ஆண்டுகளில் நிலமற்ற ஏழை எளியவர்களுக்கும் -- வீடற்றவர்களுக்கும் வழங்கிய பட்டாக்களின் எண்ணிக்கை ஆறு இலட்சம்.

எத்தனையோ ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் இருந்த கோரிக்கை — விவசாயத் தொழிலாளருக்குக்குடியிருப்பு மனை சொந்தமாக்கச் சட்டம்.

கோவையில் மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் திறக்க எடுத்துக்கொண்ட முயற்சி.

மூடப்பட்ட ஆலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு எட்டு இலட்சம் ரூபாய் நிவாரண நிதி.

பயிற்று மொழியானாலும்-- வேறு கோரிக்கையானாலும் மாணவர்களின் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்துவைத்தல்.

குடிசைமாற்று வாரியம் கண்டு-- மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டும் தன்மை.

குடிநீர் வாரியத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கத் திட்டம்.

அரசாங்க அலுவலர்களின் கோரிக்கைகளுககு இணக்கம் --ஊதிய உயர்வு--அவர்களது நீண்டகாலக் கோரிக்கையான இரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிப்பு.

ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு.

ஐந்தாண்டுகளில் புதிதாகத் தொடங்கப் பெற்ற கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை மட்டும் 84.

1967-ல் பொதுக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 44 கோடி ரூபாய் -- 1972-ல் 90 கோடி ரூபாய்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்.

கண்ணொளி வழங்கும் திட்டம்.

மின் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலை உருவாக்கும் முயற்சி.

விரிக்கிற் பெருகும் கழக அரசின் சாதனைகள்!

## கல்லூரிகளில் கற்பிக்கும் நாட்கள் குறைவு ஏற்பட்டதன் விளைவு

### தேர்வு நடத்தும் நிலை பற்றிக் கல்வியமைச்சர் நாவலர்

சென்னை, நவ. 15—

"பள்ளிகள் -- கல்லூரிகள் அடிக்கடி மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதால், கற்பிக்கும் நாட்களில் குறைவு ஏற்பட்டிருக்கிறது; கல்வி ஆண்டுக்குள் அந்தக் குறைவை ஈடு செய்ய முடியாவிட்டால் தேர்வுகளை ஒத்திவைத்து நடத்தும் சாத்தியக்கூறு ஏற்படக்கூடும்"

என்று, கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேலவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## தமிழ்நாடு மேலவை

### அவைத் தலைவர் அறிவிப்பு

சென்னை, நவ. 15—

நேற்று மாலை 4-மணிக்குக்கூடிய தமிழ்நாடு மேலவையின் முதல் நடவடிக்கையான கேள்வி -- பதில் நேரம் முடிந்ததும், அவையை காலவரையறையின்றி ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் சி. பி. சிற்றரசு அறிவித்தார்.

"அவையின் அலுவல் நிர்ணயக் குழுவின் முடிவின் மீதும் -- அவையின் அரசுக் கட்சித் தலைவர் முதலமைச்சரின் ஒப்புதல்மீதும் இம்முடிவு செய்யப்பட்டது" என்று அவர் தெரிவித்தார்.

## மாநில விவகாரங்களை மக்களவையில் எழுப்புவது சரியா?

### கம்யூனிஸ்டுகளின் முயற்சி -- கழக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 15—

**"மாநிலங்களில் சில விவகாரங்கள் நடைபெறுகின்றன! அவைகள் அனைத்தும் நாடாளுமன்றத்திற்கு வரமுடியாது – அவைகள் பற்றிய பிரச்சினைகள் இப்பேரவையில் எழுப்பப்படுமானால் அது மேத்தக் கடினமாகிவிடும்!"**

என்று மக்களவையில், அவைத் தலைவர் தில்லான், சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டுப் பிரச்சினைகளை மக்களவையில் எம். கல்யாணசுந்தரம் எழுப்பியதையொட்டி ஏற்பட்ட விவகாரத்தை யடுத்தே அவைத் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

கேள்வி நேரம் முடிந்ததும், கம்யூனிஸ்டு உறுப்பினர் எம். கல்யாணசுந்தரம், 'நான் தமிழ்நாட்டுச் சட்டம் -- ஒழுங்கு நிலைமை பற்றிக் குடியரசுத் தலைவரிடம் தந்த மனு மீது மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையை அறிய விரும்புகிறேன்' என்றார்.

கழக உறுப்பினர்கள் கோ. விசுவநாதனும் -- மற்றவர்களும் கல்யாணசுந்தரம் எழுப்பிய பிரச்சினைக்குக் கடும்எதிர்ப்புத் தெரிவித்தனர்; 'கல்யாணசுந்தரம் தலைமையிலான கம்யூனிஸ்டுகள்தான், தமிழ்நாட்டில் சட்டம் -- ஒழுங்கு சீர்குலைவை உருவாக்க விரும்புகின்றனர்; என்று குறிப்பிட்டார்.

"கல்யாணசுந்தரம், குடியரசுத் தலைவரிடம் மனு கொடுத்திருக்கலாம்; ஆனால், இந்த அவை அதைக் கவனிக்க முடியாது (அ.. இந்த அவையின் அதிகார வரம்புக்கு உட்பட்டதில்லை"

### கழக உறுப்பினர் எதிர்ப்பு

அவைத் தலைவர் எஸ். தில்லான், மாநிலங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை இந்த அவையில் எடுத்துக் கொள்ளக் கூடாது' என்றார்.

இதற்கிடையே மார்க்சிஸ்டு உறுப்பினர் ஜோதிர்மயி பாசு எழுந்து, அவைத் தலைவரிடம், அரியானா முதல்வர் பன்சிலால்மீது ஒரு மாத காலத்திற்குள்ளாக நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தமது அமைச்சக ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உறுதிமொழி தந்தாரே -- அது என்ன ஆயிற்று' என்று கேட்டார்.

"அமைச்சக ஆலோசனைக் குழுக்கள் இந்த அவையின் அங்கமல்ல; எனவே, அந்த விவகாரங்களை இந்த அவையில் எழுப்ப முடியாது" என்றார் அவைத் தலைவர் தில்லான்.

## இந்திரா--செழியன் சந்திப்பு

புதுடில்லி, நவ.:14—

நாடாளுமன்ற தி.மு.க. கட்சித் தலைவர் திரு. இரா. செழியன் இன்று தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினர்.

பத்து நிமிட நேரம் நடைபெற்ற இச்சந்திப்பில், தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த பேச்சு முக்கிய இடம் பெற்றது.

'தி.மு.க. ஆட்சியை ... கும் எண்ணம் ... அரசுக்கு இல்லை' என்பதை, திருமதி இந்திரா காந்தி மீண்டும் வலியுறுத்திச்சொன்னதாகத் தெரிகிறது."

—'இந்து': 15—11—72

## சென்னை மாநகராட்சி உறுப்பினர் கூட்டம்

### மேயர் தேர்தல்பற்றி ஆலோசனை

சென்னை, நவ. 15—

மேயர் தேர்தல் பற்றி வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் மரபு விதிகளின்படி, சென்னைநகர மேயர் காமாட்சி செயராமன், மாநகராட்சியின் பிராமணரல்லாத இந்து உறுப்பினர்கள் கூட்டத்தை நேற்று கூட்டினர்.

மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் வி. முனுசாமியும் -- காங்கிரசு மாநகராட்சி கட்சித் தலைவரும் தங்கள் வேட்பாளர்களின் பெயர்களை 17—11—72 மாலை 4-30 மணிக்குக் கூடும் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தெரிவிப்பதாகக் கூறினர்.

எனவே, 17—11—72 மாலை 3-30 மணியளவில் நடைபெற இருந்த அதிகாரச் சார்பற்ற கூட்டம் நடைபெறுது.

"17—11—72 மாலை 4-30 மணியளவில், 1972-73-ம் ஆண்டுக்கான சென்னை மேயர் -- துணை மேயர் தேர்தலுக்கான கூட்டம் நடைபெறும்" என்று மேயர் தெரிவித்திருக்கிறார்.

## குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் நீடிக்கும்

ஐதராபாத், நவ. 15—

இன்னும் 25 ஆண்டுக் காலத்துக்கேனும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் திட்டமாகவே நீடிக்க வேண்டுமென்று மத்திய குடும்பக் கட்டுப்பாட்டுக் கவுன்சிலின் கூட்டத்தில் நிச்சயிக்கப்பட்டது; இத்திட்டத்திற்கு நூறு சதவிகிதம் மத்திய உதவி அளிக்கப்பட வேண்டுமென்றும் நிச்சயிக்கப்பட்டது.

# இவரா அண்ணாவின் தம்பி?

## எதிரிக்குக் காட்டிக் கொடுப்பதுதான் அண்ணா வளர்த்த பண்பாடா?

### ஆச்சாரியார் -- கிருபளானியால் முடியாதது இவரால் இயலுமா?

புதுக் கட்சித் தலைவருக்கு நாவலர் இடித்துரை

சென்னை, நவ. 14—

"பத்திரிகைகள[illegible] பாராட்டப்படுகின்ற-மேட்டுக்குடியின ரால் பாராட்டப்படுகின்ற — காந்தியாருக்கு வலதுகரமாக இருந்த இராஜாஜி காங்கிரசிலிருந்து விலகி சுதந்தராக் கட்சியைத் தொடங்கினார், ஆனால் அது வளரவில்லை! ஜெயப்பிரகாஷ் நாராயணன் காங்கிரசிலிருந்து விலகி பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியைத் தொடங்கினார் — அதுவும் வளரவில்லை — இப்பொழுது அரசியலைவிட்டே போய் விட்டார்!

"ஆச்சாரியார் கிருபளானியும் காங்கிரசைவிட்டு விலகி வெளியே வந்தார்; அவருடைய நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும்! நிலைமைகள் எல்லாம் இப்படி இருக்கும்போது, சினிமாவினால் பெற்றிருக்கின்ற கவர்ச்சியை வைத்துக்கொண்டு அரசியலை எத்தனை நாளைக்கு நடத்திவிட முடியும்?

"அரசாங்கப் பஸ்களைக் கொளுத்திவிடுவதினாலும் — வன்முறைகளைத் தூண்டிவிடுவதினாலும் ஒரு கட்சி எட்டி வளர்ந்துவிடும்?

சட்டம் — ஒழுங்கைக் கெடும்படி தூண்டிவிடுவது எம். ஜி. ஆரா நாங்களா?

"இதுபோன்று ஒவ்வொரு கட்சியும் செய்ய ஆரம்பித்து விட்டால், பிறகு எந்தக் கட்சியும் ஒழுங்காக ஆட்சி செய்யவே முடியாதே!"

**என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தலைத்தகரையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வினவினார்; அவர் மேலும் கூறியதாவது:—**

"சனநாயகத்தில் கருத்து விளக்கங்களை எடுத்துச் சொல்வதில் எல்லோருக்கும் உரிமை உண்டு; நாங்கள் சொல்வதை அப்படியே நம்பவேண்டுமென்பதில்லை; சொல்லுகின்ற கருத்துக்களைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து, நியாயத்தின் அடிப்படையில் — நேர்மையின் அடிப்படையில் மக்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும்.

இந்த நாட்டினுடைய சனநாயகம் எப்படி இருக்கவேண்டும் — மொழிக் கொள்கை எப்படி இருக்கவேண்டும் — தமிழர்களுடைய அடிப்படை உரிமை என்ன — திராவிட இனத்திற்கு இருந்த பெருமையும், புகழும் என்ன — அதை இந்த நாடு எப்படி இழந்துவிட்டிருக்கிறது என்பதற்கான காரண காரியங்களை அண்ணா அவர்கள் எடுத்துத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், உலக நாடுகளையெல்லாம் எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டினார்; நம்மைவிட வலிமை குறைந்த — பண்பாடு குறைந்த நாடுகள் எல்லாம் எப்படிச் சிறப்புற்று வாழ்கின்றன — வளருகின்றன என்பதையெல்லாம் எடுத்துச்சொன்னார்; வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி ஏற்படுத்தவும் -- தாழ்ந்த தமிழகத்தை தலைநிமிரச் செய்யவும் பாடுபட்டார்.

சமுதாயத்தில் நிலவும் மூடப்பழக்கவழக்கங்கள் எப்படியெல்லாம் நம் வாழ்வைப் பாழ்படுத்துகின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அண்ணா அவர்கள், பேனா முனையினாலும் — நா வன்மையினாலும் எடுத்துத் தெரிவித்த கருத்துக்கள் நம்முடைய இதயத்திலே பதிந்தன; அவர் காட்டிய வழியில் இந்த நாடு சென்றால்தான், நாட்டின் ஏழ்மை போகும் — இல்லாமை நீங்கும் — என்று உணர்ந்த காலத்தில்தான் நாங்கள் எல்லாம் இந்தக் கழகத்தில் வந்து சேர்ந்தோம்.

அண்ணா கட்டிக்காத்து வளர்த்த கழகத்தை இந்த நிமிடம் வரையில் காப்பாற்றிக் கொண்டு வருகிறோம்; ஆனால் அவர் வளர்த்தக் கழகத்தை அழித்து விட்டுத்தான் — எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்து விட்டுத்தான் மறுவேலை — என்கிறார் மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர்.

எந்தப் பத்திரிகை நம்மை இழித்தும் பழித்துப் பேசியதோ அந்தப் பத்திரிகைக்கு -- எந்தப் பத்திரிகையைக் கசக்கித் தூக்கி எறிந்தாரோ அந்தப் பத்திரிகைக்கு இன்று அவர் ஆதரவு தந்[illegible]ருக்கிறார்! மாற்றம் யாரிடத்தில் -- எம். ஜி. ஆர். இடத்திலா -- அல்லது எங்களிடத்திலா?

காஞ்சிபுரம் மாநாட்டிலும் -- இராசபாளையம் மாநாட்டிலும் -- மதுரையில் நடைபெற்ற மாநாட்டிலும் பொதுமக்களைப் பார்த்துக் கேள்விகளை கேட்டவர் அவரா அல்லது நாங்களா?

எம். ஜி. ஆர். சுடப்பட்டபோது கண்ணீர் விட்டவர்கள் நாங்கள்தான்; கலியாணசுந்தரமும் —'நவசக்தி' ஏடும் அல்ல!

வேறு எந்த நடிகருக்கும் தராத பாராட்டுக்களை நாங்கள் அவருக்குத் தந்திருக்கிறோம்; அவருக்கும் 'புரட்சி நடிகர்' என்ற பட்டத்தையும், மக்கள் திலகம் என்ற பட்டத்தையும் -- அளித்திருக்கிறோம்; இதைத் தவிர 'வெள்ளி கிரீடங்கள்' தந்து மகிழ்ந்திருக்கிறோம்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மறைந்த முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர் யு கிருஷ்ணராவ் தலைமையில், 1958-ல் நான்தான் 'தங்க வாளை' அவருக்கு அளித்தேன்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு எத்தனையோ பொன்னாடைகளை இந்தக் கைதான் போர்த்தியிருக்கிறது -- 'அலை ஓசை' பத்திரிகையும், கலியாணசுந்தரமும் அல்ல!

எம். ஜி. ஆர். கழகத்தைவிட்டு வெளியேறினார்--கழக அரசை அழித்தொழிக்க முற்படுகிறார்— என்றவுடன், 'கல்கி'க்கு மகிழ்ச்சி ஏற்பட்டு, அவருடைய படத்தை 'கல்கி' ஏடு வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறது இதற்கு முன்பு எப்பொழுதாவது 'கல்கி' ஏடு இவரைப் பாராட்டியிருக்கிறதா?

1949-ல் தி. மு. கழகம் தொடங்கப்பட்டது; தொடங்கியவுடனேயே போராட்டத்தைத் தொடங்கவில்லை; கருத்து விளக்கங்களை நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கிச் சொல்லி சொல்லி -- உறுப்பினர்களைச் சேர்த்து, சமூக-- அரசியல் -- பொருளாதார கொள்கைகளைப் பரப்பி வந்தோம்; ஏறக்குறைய 4 ஆண்டுகளுக்குப் பிறகுதான் போராட்டத்தை துவக்கினோம்.

ஆனால், மதிப்பிற்குரிய எம். ஜி. ஆர். அவர்கள், கட்சியைத் தொடங்கிய ஒரு மாதத்திற்குள்ளாகவே போராட்டத்தை துவக்கியுள்ளார்; அது மட்டுமன்றி, கவர்னரிடம் தூது -- குடியரசுத் தலைவரிடம் தூது -- ஊர்வலம்--15-ந் தேதி அர்த்தால் என்கிறார்!

கம்ப இராமாயணம் எனக்குப் பிடிக்காது; ஆனால், அதில் உள்ள உவமை அணி--நயம்-- இவைகள் எனக்கும் பிடிக்கும்.

ஆண்டவனை நமக்குப் பிடிக்கவில்லையே தவிர, நடராசரின் சிற்பக் கலைச் சித்திரத்தை நாங்கள் ரசிக்கிறோம்!

அதுபோல் எம். ஜி. ஆர். அவர்களின் நடிப்பை நாங்கள் ரசிக்கிறோம்; ஆனால், அரசியல் நடைமுறையில் அவர் எடுத்திருக்கின்ற போக்கு -- கழகத்தைக் காட்டிக் கொடுக்கின்ற தன்மை -- அண்ணா அமைத்துத் தந்த அரசை அழித்தொழிக்கக் கல்யாணசுந்தரத்திற்கு இடம் கொடுக்கின்ற தன்மை-- இவைகளைத்தான் நாங்கள் வெறுக்கின்றோமே தவிர, அவர் நடிப்பை நாங்கள் வெறுக்கவில்லை!

அண்ணாவின் கொள்கைக்காக யார் யார் வந்தார்களோ அவர்கள்தான் இன்றைக்கு இங்கே இருக்கிறார்கள்; அண்ணா பெயரைப் புதுக் கட்சிக்கு வைப்பது -- கழகத்தை மேகுலைக்கின்ற முயற்சியே தவிர வேறென்ன?

ஒரு தொண்டனைக் கழகத்திலிருந்து இழக்க நாங்கள் சம்மதிக்காதபோது கழகத்தை வளர்த்து -- முக்கியமான பதவியில் இருந்த அவரை கல்யாண சுந்தரத்திடம் ஒப்படைப்பதனால் எங்களுக்கு என்ன இலாபம்?

மற்றவர்கள் பயன்படுத்துகின்ற அளவுக்கு அவர்களிடம் அவரை ஒப்படைப்பதில் நாங்கள் என்ன அவ்வளவு முட்டாள்களா?

மனம் மாறியது யார் -- அவரா நாங்களா? அண்ணா வளர்த்த கழகத்தை குறை கூறுபவர் யார் -- அவரா நாங்களா? இந்தக் கூட்டத்தை உருவாக்கியவர் யார் -- அவரா நாங்களா?

'கழகக் கட்டுப்பாட்டை மீறினால் நடவடிக்கை எடுப்பார்கள்' என்று அவருக்கு நன்கு தெரியும்; 'நாமாகவே கழகத்தைவிட்டு வெளியேறினால் நமக்கு மதிப்பு இருக்காது; நாடும் மதிக்காது; எதைச் செய்தால் நாம் வெளியேறலாம் அல்லது வெளியேற்றப்படலாம்' என்று தெரிந்துதான் கழகத்தில் பேச வேண்டியதை லாயிட்ஸ் ரோடில் பேசியிருக்கிறார்!

எந்தக் காங்கிரசுக் கட்சி மாநாட்டிலாவது, 'இவ்வளவு வரவு -- இவ்வளவு மிச்சம்' என்று சொன்னது உண்டா? அல்லது கம்யூனிஸ்டுக் கட்சி மாநாட்டிலாவது சொன்னது உண்டா?

தேர்தல் நிதிக் கணக்கைக் காண்பித்த ஒரே கட்சி தி. மு. கழகம்தான்; வேறு எந்தக் கட்சி இம்மாதிரி கணக்குக் காட்டியிருக்கிறது?

நாங்கள் சட்டமன்றத்தில் எங்களுடைய கணக்கைக் கருத்திருமன் கேட்டா -- ஹாண்டே கேட்டா--கே.டி. கே. தங்கமணி கேட்டா வைத்தோம்? நாங்களாகவேதான் சட்டமன்றத்தில் எங்களுடைய கணக்குகளை வைத்தோம்.

முதலில் 183 சட்டமன்ற உறுப்பினர்களுடைய கணக்கிலும் -- மாவட்டச் செயலாளர்களுடைய கணக்கிலும் தவறு இருந்தால் கண்டுபிடியுங்கள்; அதற்குப் பிறகு 18,000 கிளைக் கழகங்களின் கணக்கிற்குப் போவோம்!

ஏசுவிற்குப் பிறகு அவர்தான் யோக்கியமானவர் மாதிரியும், நபிகள் நாயகத்திற்கும் பிறகு அவர்தான் நாணயஸ்தர்மாதிரியும் பேசுகின்ற இவர், கடந்த மூன்றாண்டுக்காலக் கணக்கை இதுவரையிலும் சட்டமன்றத்தில் வைக்கவே இல்லை!

திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில், தலைமையேற்கு மாறு அண்ணா அவர்கள் என்னை அழைக்கையில், 'தம்பி வா -- தலைமை தாங்க வா -- உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன்' என்று குறிப்பிட்டார்; அண்ணா எங்கே -- நான் எங்கே?

ஆனால் மதிப்பிற்குரிய எம்.ஜி. ஆர்., என்னை -- 'ரப்பர் ஸ்டாம்பு' என்று சொல்லியிருக்கிறார்; கலைஞரை -- 'சர்வாதிகாரி' என்கிறார்; என். வி. நடராசனை -- 'ஆமாம் சா[illegible]' என்கிறார்; அண்ணாவின் [illegible]பாடு எங்கே -- இவரது பண்பாடு எங்கே?

அவருடைய பண்பாடு எவ்வளவு இழிநிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் இதைச் சொல்கிறேன்.

அவர், என்னை 'ரப்பர் ஸ்டாம்பு' என்று சொல்லுவதால், என்னுடைய புகழ் வளருமே தவிர, ஒருநாளும் குன்றாது--மங்காது --மறையாது!

இன்னும் இரண்டு — மூன்று மாதங்களுக்கு இத்தகைய விளக்கங்களைப் பொதுமக்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கும்; அதற்குப் பிறகு அவசியமிருக்காது என்று கருதுகிறேன்."

# தியாகத்தை அறியாதவர் திமிர் வாதம்

## கழகத்தைப் பணியவைக்க இயலாததால் ஓடிவிட்டார்

### 'எதையும் தாங்கும் இதயத்தோடு கழகத்தைக் காப்போம்'--அமைச்சர் என். வி. என். முழக்கம்

சென்னை, நவ. 15—

"மாவட்டக் கழக--வட்டக் கழக--பகுதிக் கழகங்களிலுள்ள தி.மு. கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும், யாரால் எப்படிப்பட்ட தொல்லைகள்--துன்பங்கள் தரப்பட்டாலும் அண்ணா அவர்கள் சொன்ன எதையும் தாங்கும் இதயத்தோடு ஒன்றுபட்டு நின்று கழகத்தை - கழக அரசைக் காக்க உறுதி ஏற்க வேண்டும்"

என்று துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன் அவர்கள், சென்னை 25வது வட்ட கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"நம்மிலிருந்து மாறுபட்டவர்கள் நமக்கு எவ்வளவு தொல்லைகளைத் தந்தாலும், கழகத்தைக் கட்டிக் காப்போம் -- கழகத் தலைமையைக் காப்போம்!

கழகத்தால் வளர்க்கப்பட்டு--கழகத்தால் செல்வாக்கும் பெற்றவர்கள்தான், 'கழகத்தை அழிப்பேன்' என்கிறார்கள்! நம்முடைய எதிரிகள்கூட இப்படிச் சொல்லவில்லை!

'பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட்டு என்னிடம் வராதீர்கள்; தடியடி -- சிறைத் தண்டனைகளுக்கெல்லாம் துணிகிறவர்கள் மட்டுமே என் பின்னால் வாருங்கள்' என்றுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்; அதற்கு உடன்பட்டுக் கழகத்திற்கு வந்தவர்கள் என்றுமே உறுதியோடிருப்பார்கள்!

கழக வரலாற்றில் எண்ணற்ற தோழர்கள் உயிர்த்தியாகம் செய்தார்கள்; அப்படி வளர்ந்த கழகத்தைத்தான இன்று எம்.ஜி.ஆர். ஏளனம் செய்கிறார்; ஏனென்றால் அவருக்கும் -- தியாகத்திற்கும் வெகுதூரம்!

தி. மு. கழகம் பணக்காரர்களுக்கும் பணிகிறது என்கிறார் எம். ஜி.ஆர்.; இங்கே வருகின்ற பணக்காரர்தள்தான் நமக்குப் பணிகின்றார்களே தவிர, நாம் அவர்களிடம் பணிந்ததில்லை என்பதை இந்த நாடே அறியும்.

கழகத்தில் ஒரேஒரு பணக்காரர், நம்மைப் பணியவைக்கும் நினைப்போடு இருந்தார்; அவர்தான் எம்.ஜி.ஆர்.; இப்போது அவர் போய்விட்டதால் அந்தப் பேச்சுக்கே இடமில்லை!"

## இந்தியாவில் கல்வி வளர்ச்சி

தற்போது ஆரம்பப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை 631 இலட்சம் மாணவர்கள் உள்ளனர்; 1947-ல் 141 இலட்சம் மாணவர்கள் மட்டுமே இருந்தனர்; இந்த வளர்ச்சி 350 சதவிகிதம்.

ஆறும் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1947-ன் 20 இலட்சத்திலிருந்து உயர்ந்து 1972-ல் 149 இலட்சமாக ஆகியுள்ளது; இந்த அதிகரிப்பு 650 சதவிகிதம்.

ஒன்பதிலிருந்து பதினொன்றும் வகுப்புவரை படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1947-ல் 8.50 இலட்சத்திலிருந்து 1972-ல் 84 இலட்சமாக உயர்ந்தது; இந்த அதிகரிப்பு சுமார் 900 சதவிகிதம்.

இந்தியா சுதந்தரமடைந்தபோது 2.56 இலட்சம் மாணவர்கள் மட்டுமே கல்லூரி நிலைவரை எட்டியிருந்தனர்; தற்போது 25.40 இலட்சம் மாணவர்கள் கல்லூரிகளில் படிக்கின்றனர்; இது 900 சதவிகித வளர்ச்சியாகும்.

1950-ல் கல்விக்காகச் செலவிடப்பட்டது ரூ. 11,440 இலட்சம் மட்டுமே; 1968-69-ல் இந்தத் தொகை ரூ. 85,000 இலட்சமாக உயர்ந்தது; இந்த அதிகரிப்பு 640 சதவிகிதம் ஆகும்.

## நிலக்கோட்டை வட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

நிலக்கோட்டை வட்ட தி. மு. க. செயற்குழு -- பொது உறுப்பினர் கூட்டம் 1—11—72 அன்று அவைத் தலைவர் பெ. அரிகிருட்டினன் தலைமையில் நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற செயற்குழு, பொதுக் குழுத் தீர்மானங்களையும், ஆதரித்து திரு. பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ., ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பொன் முத்துராமலிங்கம், பெ. பாண்டி, வட்டச் செயலாளர் கூ. குருசாமி, பொதுக்குழு உறுப்பினர் நெல்லை மாறன், நாராயணசாமி, அம்மாச்சாமி, விஜயன, இராசாமணி, வீரன், டார்பிடோ இராசாராம், துரைச்சாமி ஆகியோர் பேசினர்.

# சட்டம்--ஒழுங்கு பற்றிப் பேசுவோர் செயல் என்ன?

[✶]

# அமைதியின்மையை தூண்டிடுவோர் அமைதி பற்றிப் பேசுவதா?

## தமிழ்நாட்டில் நடந்துவரும் வன்செயலுக்கு யார் பொறுப்பாளி?

### சட்டமன்ற மேலவையில் புள்ளி விவரத்துடன் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 15 —

**தமிழ்நாட்டில் கண்ணமங்கலம் -- விருத்தாசலம் போன்ற இடங்களில் அண்மையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் குறித்து சிண்டிகேட் உறுப்பினர் பலராமன், சட்டமன்ற மேலவையில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்; அதற்கு விளக்கம் அளித்துப் பேசுகையில் முதலமைச்சர் கூறியதாவது :—**

"பொதுவாகத் தமிழ்நாட்டில் இப்போது நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது; அதற்கு முழுக்க முழுக்க இந்த அரசாங்கம்தான் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் குற்றஞ்சாட்டிப் பேசினார்.

கண்ணமங்கலம் நிகழ்ச்சியையும் குறிப்பிட்டு—இராமநாதபுரம், விருத்தாசலம், போடிநாய்க்கனூர் பற்றிய விவரங்களையும் தந்து -- இப்படிப் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றிருப்பதாகக் கூறினார்.

அங்கொன்று இங்கொன்றுமாகக் கடந்த ஒன்றரை மாத காலமாகத் தமிழ்நாட்டில் கலவரங்கள் சிற்சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சட்டம் -- அமைதி -- ஒழுங்கு எங்கே கெட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்; துப்பாக்கிப் பிரயோகம் -- ஊரடங்குச் சட்டம் எல்லாம் அந்த மாநிலங்களில் இருப்பதை மறந்துவிடக் கூடாது.

'அமைதி இல்லை -- அமைதி இல்லை' என்று சிலர் சொல்லிக் கொண்டே, 'தமிழ்நாட்டில் அமைதி இல்லாமல் போகவேண்டும்' என்ற செயலில் ஈடுபட்டிருக்கின்றனர்; அதை அவர்கள் விரும்புகின்றார்கள்.

தனிப்பட்ட ஒரு நபர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார் என்பதற்காக-- அப்படிக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினால் மற்ற கட்சிகள் என்ன நடவடிக்கை எடுக்குமோ அதே நடவடிக்கையை--தி.மு.க. தலைமை எடுத்ததைத் தொடர்ந்து விரும்பத் தகாத சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டில் 10—10—72 முதல், 'ரசிகர்கள்' என்ற போர்வையில் சிலரால் நிகழ்த்தப்பட்டுவரும் வன்முறைச் சம்பவங்களில், அமைச்சர்களும் -- ஆளும் கட்சியினரும் -- காவல் துறையினரும் தாக்கப்பட்டது பற்றியும், பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது -- மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது போன்ற சில சம்பவங்களையும் இங்கு தருகிறேன் :—

1. 10—10—72 அன்று திருச்சியில் சுமார் 500 பேர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று 'மாலை முரசு', 'தினத்தந்தி' போன்ற பத்திரிகைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் -- உள்ளூர் 'தினத்தந்தி' பத்திரிகை அலுவலகத்தைக் கற்களைக்கொண்டு தாக்கியும் -- தெருவில் போடப்பட்டிருந்த குழல் மின்விளக்குகளை ஏராளமான அளவில் சேதம்படுத்தியும் -- அரசு பஸ்களைத் தாக்கியும் பெரும் சேதத்தை விளைவித்திருக்கிறார்கள்.
2. 11—10—72 அன்று திருநெல்வேலியில் சுமார் 150 பேர் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்; அப்பொழுது நகரில் இருந்த கழகக் கொடிகளை வீழ்த்திச் சேதப்படுத்தியதுடன், தி. மு. க. அனுதாபிகளையும் தாக்கிப் பீதியடையச் செய்திருக்கின்றனர்; சில அரசு பஸ்களுக்கும் அவர்களால் சேதம் விளைவிக்கப்பட்டது.
3. 12—10—72 அன்று லால்குடிக்கும் -- டால்மியாபுரத்திற்கும் இடையே அரசு பஸ் ஒன்று சிலரால் நிறுத்தப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டது; இதுகுறித்துக் காவல்துறையினர் வழக்கு ஒன்று பதிவுசெய்து விசாரணை நடத்திவருகின்றனர்; அதே நாளன்று, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோகரணம் என்னுமிடத்தில் சிலர் பஸ் ஒன்றைத் தாக்கிச் சேதப்படுத்தியிருக்கின்றனர்.
4. 13—10—72 அன்று வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆரணியில் உள்ளூர் நகரமன்ற தி. மு. க. தலைவரை சுமார் 1,000 பேர் அடங்கிய வன்முறைக் கும்பல் ஒன்று தாக்கி அவருடைய காருக்குச் சேதத்தையும் -- அவருக்குக் காயத்தையும் உண்டாக்கினர்; அவர்களால் அரசு பஸ் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது.
5. 13—10—72 அன்று ஆம்பூரில் 30 பேர் கூட்டமாகச் சென்று அரசு பஸ் ஒன்றைத் தாக்கி அதன முன்பக்கக் கண்ணாடிகளையும் -- விளக்கையும் சேதப்படுத்தினர்.
6. 14—10—72 அன்று சென்னை நகரில் மாநகராட்சி ஜீப் ஒன்று சில விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டது; ஜீப் முழுவதும் சேதமடைவதற்குள் தீயணைப்புப் படையினர் அவ்விடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்திருக்கின்றனர்.
7. 15—10—72 அன்று பழனியில் சுமார் 1,000 பேர் அடங்கிய கூட்டம் ஒன்று தி. மு. க. உறுப்பினர் திரு. பி. எஸ். சேக்கின் கடையைத் தாக்கி -- இஸ்மாயில் என்ற பணியாள் ஒருவரை காயப்படுத்தி யிருக்கிறது; பின்னர் அக்கூட்டத்தினர், திரு. அப்துல் லத்தீப் என்பவரின் கடையையும் தாக்கி -- அங்கிருந்த தலைவர்களின் படங்களை உடைத்து வெளியே எறிந்து வன்முறை நிகழ்ச்சிகள் பல புரிந்திருக்கின்றனர்.
8. 15—10—72 அன்று தூத்துக்குடியில் தனியார் பேருந்து எண் 4805—ன் ஓட்டுநர் சுமார் 26 பேர்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்தார்.
9. சேலத்தை நோக்கித் திருச்சியிலிருந்து சென்றுகொண்டிருந்த அரசு பஸ் ஒன்று 17—10—72 அன்று சிலரால் தாக்கப்பட்டுப் பின்புறக் கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டன.
10. 20—10—27 அன்று காரைக்குடியில், சட்ட அமைச்சர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் கற்கள் வீசப்பட்டன; அதில் காவலர் ஒருவர் காயமடைந்தார்; கூட்டம் முடிந்து அமைச்சரும் மதுரை எஸ். முத்து -- எஸ். எஸ். தென்னரசு மற்றும் ஏனையோரும் காரைக்குடியிலிருந்து திரும்பும் வழியில் சிலர் கற்களைக் கொண்டு தாக்கியதில் அமைச்சரின் காருக்கு சேதம் ஏற்பட்டது.
11. 22—10—72 அன்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வேழவேந்தன் மற்றும் திரு. பரந்தாமனும் திருத்தணியில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்திற்காகச் சென்று கொண்டிருக்கையில், அவர்கள் சென்ற கார் (எண். டி. என். சி. 909) இடைமறிக்கப்பட்டுச் சிலரால் தீ வைக்கப்பட்டது; சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் காயம் ஏதுமின்றித் தப்பினர்; சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து வந்த காவல் துறையினரையும் கூட்டத்தினர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.
12. 22—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில் நடந்த தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் கலவரம் விளைவித்த வன்முறைக் கும்பலைக் கலைப்பதற்குக் காவல்துறையினர் கண்ணீர்ப் புகைப் பிரயோகிக்க நேரிட்டது; அதே நாளன்று, வேலூர் நகரில் வருவாய்த்துறை அமைச்சர் கலந்துகொண்ட கூட்டத்திலும் சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டன; கூட்டத்தைக் கலைப்பதற்குக் காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க நேரிட்டது; கலைந்து செல்லும்பொழுது அக்கூட்டத்தினர் பல கட்டடங்களையும்-- அரசு பஸ்களையும் -- காவல்துறை நிழற் குடைகளையும் தாக்கிச் சேதப்படுத்திவிட்டுச் சென்றனர்.
13. 22—10—72 அன்று தருமபுரி நகரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்களுடைய காரை ஒரு கூட்டத்தினர் கற்களைக் கொண்டு தாக்கியதில் காரின் கதவுகளும் -- கண்ணாடிகளும் உடைந்தன.
14. 22—10—72 அன்று இராமநாதபுரத்தில் நடந்த தி. மு. க. கூட்டத்தில் பெரும் கலவரம் விளைவிக்கப்பட்டுக் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகமே செய்யும் அளவிற்கு வன்முறைகள் நிகழ்ந்துள்ளன; இக்கூட்டத்தில் கலந்துகொண்ட உணவு அமைச்சர் அவர்களும் -- நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. டி. கிருட்டினன் அவர்களும் கல்லெறிதலுக்குள்ளாகிக் காயமடைந்தனர்.
15. 22—10—72 அன்று மதுரை நகரில் சட்டமன்ற தி. மு. கழக உறுப்பினர் கே. திருப்பதியின் வீட்டை சிலர் கற்களை வீசித் தாக்கியிருக்கிறார்கள்; இது குறித்துக் காவல்துறையினர் வழக்கு ஒன்று பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.
16. 24—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டம் ஆரணியில் நடந்த தி. மு. க. கூட்டம் ஒன்றைக் கலைப்பதற்கு முயன்றவர்களைக் காவல்துறையினர் விரட்டியடிக்க நேரிட்டது; அப்பொழுது அவர்களால் நடத்தப்பட்ட கல்லெறிதலில், 5 காவல் துறையினர் காயமடைந்தனர்; ஒரு காவல்துறை வாகனமும் சேதப்படுத்தப்பட்டது.
17. 26—10—72 அன்று திருச்சி மாவட்டம் வேலன் விடுதியில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்திற்கு இரண்டு லாரிகளில் வந்திறங்கிய சுமார் 150 பேர் கற்களைக் கொண்டு தாக்கி -- கூட்டத்தில் கலவரம் விளைவித்தனர்; கற்களை வீசியதில் ஒரு ஜீப் -- ஒரு கார் மற்றும் மேடைமீது பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கி -- மின்சாதனங்கள் அனைத்தும் சேதமடைந்தன; பொதுமக்களில் இருவரும் காயமடைந்தனர்; கூட்டத்தில் கலந்துகொள்ள சென்றிருந்த அமைச்சர்கள் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
18. 29—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டம் கண்ணமங்கலத்தில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ஏற்படுத்திய கலவரம் இறுதியில் காவல்துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தும் வரை கொண்டு சென்றுவிட்டது.
19. 4—11—72 அன்று மதுரை மாவட்டம் நிலக்கோட்டை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்சியின் கொடி ஒன்றை ஏற்றுவதில் தோன்றிய பிரச்சினை மோதுதலாக உருவெடுத்து -- அதில் பெண்மணி உட்படச் சிலர் காயமடைந்தனர்.
20. 5—11—72 அன்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டமங்கலத்தில் அதேபோன்று புதிதாக அமைக்கப்பட்ட கட்சியின் கொடியை நடுவதில் ஏற்படுத்தியகலவரத்தில் சில காவல்துறையினர் காயமடைந்தனர்; காவல்துறை வாகனம் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது.
21. 12—11—72 அன்று போடிநாயக்கனூரில், சொக்கன் என்ற தி. மு. க. உறுப்பினர் சிலரால் கத்தியால் குத்தப்பட்டார்; உள்ளூர் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**இவைகள் அனைத்தையும் பார்க்கும்போது தி.மு. கழகக் கூட்டங்களில்தான் கலவரங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை அனைவரும் உணரலாம்.**

இந்தத் தகவல்கள் காவல் துறையினரால் தரப்பட்டு சொல்லப்படுவதாக யாரும் கருதத் தேவையில்லை; இந்து --'தினமணி' மற்றும் தி. மு. கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சிலருக்காகவே தங்கள் பத்திரிகை முழுவதையும் பயன்படுத்தும் வேறு சில பத்திரிகைகளிலும் வெளியிட்ட விவரங்கள்தான் இவை; நான் இவைகளைத் தொகுத்து வைத்து இருக்கிறேன்.

நடைபெற்ற சம்பவங்கள் மூலம் ஒரு இளம் மாணவனும் -- வயோதிகர் ஒருவரும் இறந்து விட்டார்கள்; அதற்காக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்; இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை அரசு செய்திருக்கிறது; என்றாலும், இறந்தவர்கள் உயிர் பெற்றுவிடப் போவதில்லை; தவிர்க்கமுடியாத நிலையில் இந்த சம்பவங்கள் நடைபெற்று விட்டன.

புதிய கட்சியினர் சார்பில் நடைபெற்ற எல்லாக் கூட்டங்களிலும் எவ்வளவு தரக்குறைவாகப் பேசினாலும், அதற்காக அமைதியாகவே நடைபெற்றுருக்கின்றன; ஆனால் தி.மு. கழகத் தலைவர்களும் -- அமைச்சர்களும் பேசிய கூட்டங்களில்தான் கலவரம் விளைவிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த அவை உணர வேண்டும்.

இனிமேல் இதுபோன்ற பிரச்சினைகள் நிகழாவண்ணம், சனநாயக ரீதியில் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள எல்லாக் கட்சியினரும் -- இளம் மாணவர்களும் -- அவர்களுடைய பெற்றோர்களும் ஒத்துழைக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

# கே. ஏ. மதியழகனுக்கு முதலமைச்சர் யோசனை

சென்னை, நவ. 15—

முதலமைச்சர் கலைஞர் அவர்களை நேற்று நிருபர்கள் சந்தித்தனர்; அதுபோது நிருபர்கள் கேட்ட கேள்விகளும் முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :—" அவைத்தலைவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று 178 எம்.எல். ஏ.-க்கள் கையெழுத்திட்டு கொடுத்த மனுப்படி இராஜினாமா செய்ய முடியாதென்று அவைத் தலைவர் மதியழகன் கூறிவிட்டதால், அவர்மீது உயர் நீதிமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் யாரேனும் வழக்கு (ரிட் ஆப் மேன்டமஸ்) தாக்கல் செய்வோகிறார்களா?"

பதில் :—" அதுபற்றி இப்போது ஒன்றும் யோசிக்கவில்லை; அவரை அவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்த சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையோர், அந்தப் பதவியிலிருந்து அவர் விலகிக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற யோசனையை, சனநாயக ரீதியில் ஏற்றுக் கொள்வது நல்லது; இதை, நண்பர் என்ற முறையில் இந்த யோசனையை நான் அவருக்குக்கூறிக்கொள்கிறேன்.

### மேயர் தேர்தல் பற்றிய முடிவு

கேள்வி:—"சென்னை மாநகராட்சி மேயர் தேர்தல் எப்படி நடக்கப் போகிறது?

பதில் :—" முறைப்படி ஆட்சி மன்றக் குழு கூடி முடிவு செய்யும்."

### நாஞ்சில் மனோகரன் பிரச்சினை

கேள்வி :—" நாஞ்சில் மனோகரன் தி. மு. கழகத்திலிருந்து விலகி விடுத்த அறிக்கையில், 'என்னை நம்பாத கழகத்திலிருந்து கொண்டு நான் எப்படி செயல்பட முடியும்' என்று, குற்றஞ் சாட்டியிருக்கிறாரே.

பதில் :—" மனோகரன் பற்றி நான் எந்தக் கருத்தும் கூறுவதற்கு இல்லை."

### மக்களவைதி.மு.க.கட்சித் தலைவர் தேர்ந்தெடுப்பு

கேள்வி :—" மனோகரனுக்குப் பதிலாக மக்களவையில் தி. மு. கழகத்தின் கட்சித் தலைவராக யார் இருப்பார்?

பதில் :—" துணைத் த[illegible]வர் இருக்கிறார்; இரண்டுக்கும் சேர்ந்த தலைவராகச் இரா செழியன் இருக்கிறார்; இதற்கிடையில், நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்; அதற்கான ஆணைகள் தி. மு. கழக மேலிடத்திலிருந்து அனுப்பப்படும்.

### [illegible]திய போலீஸ்

[illegible]வி :—" தமிழ் நாட்டுக்கு [illegible]வும் மத்திய ரிசர்வ் போலீஸ் வ[illegible]ருக்கிறதா?

பதி[illegible] அப்படி ஒன்[illegible]

# தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடர் தள்ளிவைப்பு--ஆளுநர் நடவடிக்கை

## 'டிசம்பர் 5-ல் கூட்டம் நடைபெறும்' என்ற அவைத் தலைவரின் அறிவிப்பு செயலிழக்கிறது

### இரு அவைகளும் கூடும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்

**அலுவல்களை நிர்ணயித்து அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படும்**

சென்னை, நவ. 15—

தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரு அவைகளின் இப்போதைய கூட்டத்தொடரைத் தள்ளிவைத்து (புரோரோக்) ஆளுநர் கே. கே. ஷா பிரகடனம் விடுத்திருக்கிறார். மாநில அரசின் ஆலோசனையையொட்டி ஆளுநர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இரு அவைகளையும் மீண்டும் கூட்டுவதற்கான தேதி பின்னர் முடிவு செய்யப்படும்.

**அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சட்டப் பேரவைக் கூட்டத்தை திடீரென்று டிச. 5-ம் நாள் வரையில் ஒத்தி வைத்துவிட்டதையடுத்து ஆளுநர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.**

**கூட்டத் தொடரை முடித்துவைத்து ஆளுநர் பிறப்பித்துள்ள உத்தரவு, இனி புதிதாகக் கூட்டத் தொடர் ஒன்றைக் கூட்டுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது; அன்றியும், 'டிசம்பர் 5-ம் நாளன்று சட்டப் பேரவை கூடும்' என்ற கே. ஏ. மதியழகனின் அறிவிப்பும் செயலிழந்து விடுகிறது.**

**இனி, துணை மானியக் கோரிக்கைகள் – அவைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் போன்றவைகளைக் குறிப்பிட்டு – அவைகள்மீது விவாதம் நடத்துவதற்காகச் சட்டமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படக் கூடும் என யூகிக்கப்படுகிறது.**

**இன்னின்ன பிரச்சினைகளுக்காகச் சட்டமன்றம் கூட வேண்டுமெனத் திட்டவட்டமாக உத்தரவிடப்பட்டால், அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமல் கூட்டத் தொடர் முடிந்துவிட இயலாது என்றும் கருதப்படுகிறது.**

சட்டமன்றத்தின் இப்போதைய கூட்டத் தொடர் ஆகஸ்டு 9ந் தேதி ஆரம்பமாகியது.

நேற்று முன்தினம் சட்டப் பேரவையை, அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் திடீரென்று ஒத்திவைத்ததால் ஏற்பட்ட நிலைமையையொட்டி ஆளுநர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். இரு அவைகளும் மீண்டும் கூடும் தேதி பின்னர் முடிவு செய்யப்படும்.

ஆளுநரின் இன்றைய அறிவிப்பின் மூலம் சட்டமன்றத்தை மீண்டும் கூட்ட வழி ஏற்படுகிறது.

துணை மானியக் கோரிக்கைகள் -- அவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவைகளை நிறைவேற்றுவது உட்பட அவையின் அலுவல்களைத் திட்டவட்டமாக நிர்ணயித்து ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படலாம் என்று அதிகார வட்டாரங்கள் கூறின.

"குறிப்பிட்ட அலுவல்கள் முடியுமுன் அவையை ஒத்தி வைக்க முடியாது" என்றும் அவசரச் சட்டத்தில் விதிக்கப்படலாம்.

இந்த அவசரச் சட்டம் 1968ல் பஞ்சாபில் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம்போல் இருக்கும்.

பஞ்சாபில் அவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்ததையடுத்து சட்டமன்றத்தை, அவைத் தலைவர் இரண்டு மாதத்துக்கு ஒத்தி வைத்தார்; அப்போது அங்கு ஆளுநர் அவசரச் சட்டம் பிறப்பித்தார்! 'நிதி சம்பந்தமான அலுவல்களை முடிக்காமலும் -- அவையின் அனுமதியின்றியும் சட்டமன்றத்தை ஒத்தி வைக்கக் கூடாது' என்று அந்த அவசரச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

**விளைவுகள் பற்றி விளக்கம்**

சட்டமன்றத்தின் ஒரு கூட்டத் தொடரை முடித்து விட்டதாக ஆளுநர் அறிவித்தால் முந்திய கூட்டத்தில் நோட்டீசு கொடுக்கப்பட்டிருந்த திட்டங்கள் -- கேள்விகள் அனைத்தும் காலாவதியாகிவிடும்; ஆகவே, முந்திய கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அறிவிப்பும் காலாவதியாகிவிடும்; நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு புதிய நோட்டீசு கொடுக்க வேண்டும்; மசோதாக்கள் காலவாதியாகமாட்டா.

## சட்டத் துறையினர்--ஆளுநர் சந்திப்பு

சென்னை, நவ. 14—

நேற்று சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்த சில மணிநேரத்திற்கெல்லாம், சட்டமன்றச் செயலாளரும் -- சட்டத்துறை அதிகாரிகளும் ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஆளுநரைச் சந்தித்தனர்.

**அவசர ஆலோசனை**

சட்டப் பேரவைக் கூட்டத்தை அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஒத்திவைத்தவுடன், முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அமைச்சர்களுடன அவசர ஆலோசனை நடத்தினர்.

சட்டமன்றச் செயலாளர்--சட்டத் துறைச் செயலாளர்--இதர அதிகாரிகள் ஆகியோரும் அதுபோது உடனிருந்தனர்.

## நடக்க இருப்பவை

### 16--11--72

**சென்னை 24-வது வட்டம்**

தி.மு.க. -- சார்பு மன்றங்கள் சார்பில் மாலை 7 மணிக்கு தண்டையார் பேட்டை மணிக்கூண்டு அருகில்; தலைவர்: து. வேணுகோபால்; பேசுவோர்: தந்தை பெரியார், கி. வீரமணி, நீலநாராயணன் எம்.எல்.சி., எம்.ஆர்.கண்ணன் எம்.எல்.ஏ., வி. முனுசாமி எம்.சி., அ. செல்வராசன், மைனர் மோசஸ், ஆர். ஆறுமுகம், அ. ந. குருமூர்த்தி, மற்றும் பலர்.

## சென்னை 8-வது வட்டத்தில் தி.மு.க. கலைநிகழ்ச்சி

17—11—78 மாலை 7 மணியளவில், சென்னை 8-வது வட்ட தி.மு.க. சார்பில், இராயபுரம் -- மணைமரத் தொட்டி அம்மன் கோவில் அருகில் இரா. மு.மனோகரன் எம்.சி. தலைமையிலும் -- மு. க. ஸ்டாலின் முன்னிலையிலும் மலகுரல் மன்னன் சிவகங்கை சேதுராசன் குழுவினரின் 'எங்கே போகிறாய் ?' எனும் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] இது வெளியிடப்படுகிறது.

# கட்சி தாவிய மனோகரன் வீட்டுமுன் ஆர்ப்பாட்டம்

## தொகுதி மக்கள் கொந்தளிப்பு-- பல்லாயிரவர் அடங்கிய ஊர்வலம்

சென்னை, நவ. 15—

கட்சி விட்டுக் கட்சி தாவிய மக்களவை உறுப்பினர் மனோகரனுக்குத் தொகுதி மக்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் நேற்று மாபெரும் ஊர்வலம் நடத்தி மனோகரன் வீட்டு முன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாலை 4-30 மணிக்கு வட சென்னை அண்ணா பூங்கா இராபின்சன் பூங்காத் திடல் -- அண்ணா சிலையிலிருந்து கழக வீரர்களின் ஊர்வலம், சென்னை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் அ. செல்வராசன் தலைமையில் புறப்பட்டது.

ஊர்வலத்தில், வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியைச் சார்ந்த பகுதிக் கழகச் செயலாளர்களும் -- மாநகராட்சி உறுப்பினர்களும் -- ஆயிரக்கணக்கான தோழர்களும் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் எத்தகு அறிவிப்புமின்றித் திடீரெனப் புறப்பட்டும் கூட, பல்லாயிரம் பேர் கலந்து கொண்ட மாபெரும் ஊர்வலமாக அது நடைபெற்றது.

வடசென்னைத் தொகுதியில் முக்கிய தெருக்கள் வழியாக நடைபெற்ற ஊர்வலம், தோழர் மனோகரன் வீட்டுக்கு அருகில காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது; அவ்வளவு பெரிய ஊர்வலமாக அவர் வீட்டுக்கு முன் போகக் கூடாது என்று காவல் துறையினர் தடுத்ததன்மீது அணி அணியாகத் தோழர்கள் சென்று தங்களது கண்டனத்தைத் தெரிவிக்க முற்பட்டனர்.

எனினும், அணி அணியாகச் சென்ற தோழர்களும் அடுத்தடுத்து காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

முதல் அணி வண்ணைப் பகுதிச் செயலாளர் பி. ஏ. என். இராசரத்தினம் தலைமையிலும் -- அடுத்த அணி மாநகராட்சி உறுப்பினர் தி. சு. நல்லதம்பி -- மூன்றாவது அணி துறைமுகம் பகுதிச் செயலாளர் கே. எஸ். இலக்குமணன் தலைமையிலும் நடைபெற்றது.

கைது செய்யப்பட்ட தோழர்கள் பின்னர் விடுதலையாயினர்.

## கே.ஏ. மதியழகன் இல்லத்தின் முன்..

சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகனுக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்க ஆயிரம் விளக்குத் தொகுதியைச் சார்ந்த கழகத் தோழர்கள் 300 பேர் 13—11—72 மாலை ஊர்வலமாகப் பகுதிச் செயலாளர் அ. ஜார்ஜ் தலைமையில் சென்றனர்.

அத்தோழர்களை நகரப் போலீசார் அண்ணாசாலை—ஆடம்ஸ் சாலை சந்திப்பில் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

# தூய தொண்டர்கள் உழைப்பால் வளர்ந்தது கழகம்

## தோட்டத்திலே கட்சி உண்டாக்கியவரால் அதனை அழித்துவிட முடியாது

### 'களை'கள் ஒழிந்தால் கழகம் புனிதமாகும்-- கே. விநயகம் கருத்துரை

சென்னை, நவ. 15—

'கொள்கையால் ஈர்க்கப்பட்டுத்தான் நான் கழகத்திற்கு வந்தேன்!

" பதவிகளுக்கு ஆசைப்பட்டவர்கள் -- உழைப்பதற்கு அஞ்சுகின்றவர்களெல்லாம் ஒதுங்கிக் கொள்கிறார்கள்! போகட்டுமே -- இதனால் கழகம் இன்னும் புனிதப்படும்!

" பெரும்பான்மை பலம் படைத்த இந்த அரசாங்கத்தை அற்பமான குற்றச்சாட்டுகளால் அழித்துவிட முடியாது "

என்று வழக்கறிஞர் கே. விநயகம், சென்னை 25-வது வட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது :—

"பதினைந்து நாளுக்கு ஒரு தடவையேனும் சட்டமன்றத்திற்கு வரவேண்டும் என்பது விதி; பதினைந்து நாளுக்கு ஒரு தடவைதான் எம். ஜி. இராமச்சந்திரன் வருவார்; உள்ளே வருவார் அல்லது வெளியே காரில் இருந்தவாறே புத்தகத்தைக் கொண்டுவரச் சொல்லி கையெழுத்துப் போட்டுவிட்டு அப்படியே போய்விடுவார்; அப்படி -- தமக்கு வாக்களித்த தொகுதி மக்களையே மதிக்காத அந்த எம். ஜி. ஆர்தான் இன்றைக்கு தி. மு. கழகத்தை எதிர்த்து தனிக் கட்சி தொடங்கியிருக்கிறார்.

அவருக்குக் கலைஞர் அரசை நீக்கிவிட்டு -- தாமே முதலமைச்சராக வேண்டும் என்று ஆசை!

தி மு. கழகத்தை ஒழித்துவிடுவது என்பது அவரால் முடியக்கூடிய 'காரியமா? இருபது ஆண்டு ஏகபோக அரசாக இந்த நாட்டில் இருந்த காங்கிரசை ஒழிக்க அண்ணா -- கலைஞர் -- நாவலர் முதலானோர் பட்டிதொட்டிகள்தோறும் எவ்வளவு தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார்கள் என்பது எனக்குத்தான் தெரியும்; அப்படிப் பாடுபட இவரால் முடியும்?

கட்சி தொடங்கி இத்தனை நாட்கள் ஆகியும், குண்டுசட்டிக்குள்ளே குதிரை ஓட்டுவதுபோல் இங்கேயே உட்கார்ந்து கொண்டு, 'தமிழ்நாடே என் பக்கம்தான்' என்று கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்-- அந்தத் திடீர்த் தலைவர்!

சட்டமன்ற உறுப்பினர் ஆனாலே தாம் பார்க்கும் மற்ற தொழிலை விட்டுவிட வேண்டும் என்பது சட்டம்; எம்.எல்.ஏ. ஆனபோது நான்கூட, என் வக்கீல் தொழிலை விடத்தான் செய்தேன்; எம். ஜி. ஆரால் அப்படித் தொழிலை விட முடிந்ததா?

அண்ணாவின் தாரக மந்திரமான கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு ஆகியவற்றின்படி செயலாற்றக்கூட முடியாதிருந்த பெரிய மனிதர் அவர்!

1967-ல் தி. மு. கழக அரசு அமைந்தபோது, 'சட்டமன்றத்தில் எல்லோரும் கணக்கு வைக்க வேண்டும்' என்றார்கள்; நானும் தந்தேன்; அப்படித் தந்த கணக்கில் ஒரு பிழை இருந்தது; மறுநாளே அவைத் தலைவரிடம் கேட்டு அந்தத் திருத்தத்தைச் செய்தேன்; அந்த அளவுக்குக் கணக்கு வைப்பதை நான் மதித்தேன்.

எம்.ஜி.ஆர். அப்படியெல்லாம் மதித்தாரா? மதித்திருப்பாரேயானால், கடந்த மூன்றாண்டுகளாக அவர் ஏன் கணக்கு வைக்கவில்லை?

தூய தொண்டர்களின் உழைப்பில் வளர்ந்த தி. மு. கழகத்தின் தலைவர் கலைஞரை, தோட்டத்திலே கட்சி உண்டாக்கிய எம்.ஜி.ஆர். அசைக்க முடியுமா என்று பார்க்கிறார் -- முடியுமா?

என்னுடைய பழைய தலைவர் காமராசரே இதற்காகப் படாத பாடுபட்டுவிட்டு அசந்துபோய் உட்கார்ந்துவிட்டார் என்பதை உணர வேண்டும்."